சுடர் ஒளி
THE SUDAR OLI
சுඩර් ඔළි
விலை 10/=
28.07.2020
செவ்வாய்க்கிழமை

## நெடுங்குளம் இளைஞனுக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 28
கந்தக்காடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தில் சேர்க்கப்பட்டிருந்த யாழ்ப்பாண இளைஞன் ஒருவரும் 6

# கோத்தாவை எதிர்க்கத் திராணியற்ற கோழைகளுக்கா உங்கள் வாக்கு?



### விக்னேஸ்வரனை ஆதரிப்போரை சாடுகின்றார் சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜூலை 28
ஜனாதிபதித் தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவை எதிர்க்கத் திராணியற்று கோழைகள் போன்று ஒளிந்து ஓடிய விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்? அல்லது கோத்தாபயவை நேரடியாக எதிர்த்து, அவரைத் தோற்கடிக்க தமிழ் மக்களை அணி திரட்டிய தமிழ்த் தேசியக் 6




# யாழ்.போதனாவில் ஒருவருக்கு கொரோனா?

### 'வீக் பொஸிட்டிவ்' என்கிறது மருத்துவ அறிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 28**
**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த, சவூதியிலிருந்து நாடு திரும்பிய ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையின் போது 'வீக் பொஸிட்டிவ்' கண்டறியப்பட்டுள்ளது.** 6

## விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, ஜூலை 28
வவுனியா பறண்நாட்டங்கல் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சாவடைந்துள்ளார். தங்கராஜா பால்ராஜ் (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார்.
வவுனியாவிலிருந்து ஓமந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிளும், ஓமந்தையிலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த 6

## கொரோனாவால் பிற்போடப்பட்ட தபால் வாக்களிப்பு நாளை

கொழும்பு, ஜூலை 28
கொரோனா காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ராஜாங்கனை பிரதேச செயலர் பிரிவுக்கு 6



## கொரோனா என்று அச்சப்படாது வாக்களியுங்கள்

### யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொரோனா என்ற அச்சமில்லாது அனைத்து மக்களும் வாக்களிக்கவேண்டும் என்று யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் யஸ்டின் ஞானப்பிரகாசம் கோரிக்கை விடுத்துள்ளார். 6

## வலையில் சிக்கிய துப்பாக்கிச் சன்னக்கோர்வை

கிளிநொச்சி, ஜூலை 28
கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலி கடலில் தொழில் ஈடுபட்ட மீனவரின் வலையில் ஏஜிஎல் வர்க்கத்தைச் சேர்ந்த 16 துப்பாக்கிச் சன்னங்கள் அகப்பட்டுள்ளன. 6



## புதினம் தெரியுமோ?

**இந்தமுறை வன்னியில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு போகவேண்டிய வாக்குகளைப் பிரிப்பதற்காக, மொட்டுக்கட்சி சில 'டம்மி' சுயேச்சைக் குழுக்களை களமிறக்கியிருக்கிறது . அதில ஒரு சுயேச்சைக் குழு, கொழும்பில் மொட்டுக் கட்சியின் உயர்மட்டங்களைச் சந்தித்து, நாங்கள் வெல்லமாட்டோம். ஆனால் குறைந்தது 10 ஆயிரம் வாக்குகளையாவது கூட்டமைப்புக்கு போகவிடாமல்** 6

## கடற்றொழிலுக்கு சென்றவரை காணவில்லை

கிளிநொச்சி, ஜூலை 28
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர் தொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமற் போனோர் என பளை பொலிஸில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நேற்றைய தினம் இரண்டு மீனவர்கள் ஒரு படகில் தொழிலுக்குச் சென்றுள்ளனர். படகு கவிழ்ந்த நிலையில் தொழி 6



## கொரோனாவிலிருந்து மீள பால்குட பவனியும் யாகமும்

யாழ்ப்பாணம், ஜூலை 28
கொரோனாவிலிருந்து மக்களை மீட்கவேண்டி பால்குட பவனியும் மகா சுதர்சன யாகமும் வடமராட்சி துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 6

## கொரோனா நோயாளியிடம் சைக்கிள் வாங்கியவர் சிக்கவில்லை

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு ஐ.டி.எச் வைத்திய சாலையில் இருந்து தப்பிச் சென்ற கொரோனா நோயாளி அங்கொடையில் திருடிய சைக்கிளைப பெற்ற நபர் இதுவரையில் பொலிஸ் நிலையத்தில் சரணடைய வில்லை எனத் தெரிவிக்கப்ப டுகின்றது. இந்த நோயாளி தான் திருடிய சைக்கிள் தொடர்பில் எந்த ஒரு தகவ லையும் வெளியிடவில்லை. அந்த சைக்கிளை யாரோ ஒருவர் பொறுப்பேற்றுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனா ரத்ன தெரி வித்துள்ளார்.

எனினும் இந்தச் சைக்கிளில் கொரோனா பரவும் அளவுக்கு கிருமி இல்லை என சுகாதார பணிப்பாளர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதனால் சைக்கிள் தொடர் பில் அச்சம் அடையத் தேவை யில்லை. எனினும் சைக்கிள் பெற்றுக் கொண்ட நபரை கண்டுபிடிப்பது அவசியம் என அவர் கூறியுள்ளார். இதே வேளை இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தற்போது ஓரளவிற்கு குறைவ டைந்துள்ளது என்று சுகா தார பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (ரி1)

## சட்டவிரோத சிகரெட்டுக்களுடன் இளைஞன் கைது

அம்பாறை, ஜூலை 28

அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக சட்டவிரோத சிக ரெட்டுக்களை கடத்திய இளை ஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந் துறை பகுதியின் ஊடாக தின மும் சட்டவிரோதமாக மோட் டார் சைக்கிளில் சிகரெட் பக் கெட்டுக்கள் கடத்தப்படுவதாக வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரி வின் பொறுப்பதிகாரி தலைமை யிலான குழுவினரால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சந்தேகநபர் கைதாகியுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 400 சட்ட விரோத சிகரெட் பக்கட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும், கைதா னவர் கல்முனை பிரதே சத்தை சேர்ந்த 25 வயதுடையவர் என வும் பொலிஸார் தெரிவித்துள்ள னர். மேலும் சந்தேகநபர் கல்மு னையிலுள்ள பாடசாலை மாண வர்களுக்கு போதைப்பொருள் மாத்திரை விநியோகத்திலும் ஈடு பட்டுள்ளார் என பொலிஸ் விசாரணை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# மஞ்சள் இறக்குமதிக்கு அனுமதி இல்லை

### ஜனாதிபதி திட்டவட்டம் என்கிறார் பந்துல

கொழும்பு, ஜூலை 28



எந்தவொரு சூழ்நிலையிலும் மஞ்சள் இறக்குமதி செய்ய அனு மதி வழங்கப்படமாட் டாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், அதற்குப் பதிலாக உள் ளூர் மஞ்சள் செய்கையாளர்க ளுக்கான உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்பை மேம்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு தற்போது உள்ளூர் நுகர்வுக்கு சுமார் 4 லட்சம் கிலோ மஞ்சள் தேவைப்படுகிறது. அத்து டன் உள்ளூர் சந்தையில் மஞ்சள் பற்றாக்குறை காரணமாக அதன் விலை அதிகரித்துள்ளது.

மியன்மார் மற்றும் இந்தியாவிலி ருந்து நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மஞ்சளின் இறக்குமதி, தற்போது கொரோனா பரவல் கார ணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)



வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 31 மாணவர்களுக்கு முதல்நன்மை எனும் அருட் சாதனம் வழங்கும் நிகழ்வு ஆலய பங்குத்தந்தை எஸ். இராஜநாயகம் தலைமையில் நடந்த திருப்பலியின்போது இடம்பெற்றது. கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமான, மாணவர்களைத் தயார்படுத்தும் மறைக்கல்வி செயற்பாடுகளை நிறைவு செய்த 31 மாணவர்களுக்கே அருட்சாதனம் வழங்கப்பட்டது. இந்த விஷேட நிகழ்வில் மறை உரையை அருட்பணி சசி நிகழ்த்தியதுடன் அருட்சகோதரிகள், மறை ஆசிரியர்கள், பங்கு மக்கள் பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண் டனர். (ரி3)



## லயன்ஸ் கழகத்தினரால் தையல் இயந்திரங்கள் கையளிப்பு

சாவகச்சேரி, ஜூலை 28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின ரால் ஆறு பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு தையல் இயந்தி ரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கழகத் தலைவர் லயன் து.இளங் குமரன் தலைமையில் கடந்த ஞாயிற் றுக்கிழமை கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வும் இடம்பெற்றன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் ராஜ்குமார் உதவிப் பொருள்களை வழங்கினார். (ரி3-9)

## ஜனாதிபதி கோத்தாவை நெகிழ வைத்த சம்பவம்

கொழும்பு, ஜூலை 28

சிறுவர்கள் இருவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை நெகிழ வைத்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி, தேர்தல் பிரசாரத்துக்கு சென்றிருந்த போது ஜனாதிபதியை ஓவியமாக வரைந்த சிறுவன் அதனை ஜனாதிபதியிடம் கைய ளித்துள்ளான். அதனை மகிழ்ச்சியு டன் அவர் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, ரிதிகம பிரதே சத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பிரசாரக் கூட்டத்தில் இஸ்லாமிய சிறுமி ஒருவர் ஜனாதிபதியை ஓவியமாக வரைந்து வழங்கியிருந் தார். ஜனாதிபதி இவர்கள் இருவரு டனும் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார். (ரி2)

### மட்டு. செங்கலடியில்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கவனவீர்ப்புப் போராட்டம் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, ஜூலை 28

வடக்கு - கிழக்கு மாகாணத்தி லுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் மட்டக்களப்புச் செங்கலடியில் நேற்றுக் காலை முன்னெடுக்கப் பட இருந்த கவனவீர்ப்புப் போராட் டம் நீதிமன்ற உத்தரவின்பேரில் இடைநிறுத்தப்பட்டது.

யாழப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய எட்டு மாவட் டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவு கள் இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படவிருந்த நிலையில் நீதிமன்றின் ஊடாக பெறப்பட்ட



தடையுத்தரவை அடிப்படையா கக் கொண்டே பொலிஸார் இந்தப் போராட்டத்தை இடைநிறுத்தினர்.

ஏறாவூர் நீதிமன்றம் ஊடாகவே இந்தத் தடையுத்தரவு ஏறாவூர் பொலிஸாரினால் பெறப்பட்டுள் ளது. தற்போது தேர்தல் நடை பெறவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ்த் தேசி யத்துக்கும் தமிழர்களின் பிரச்சி னைக்கும் ஆதரவாகச் செயற்ப டுவோரை தெரிவுசெய்யவும், காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் பிரச்சினைகளைச் சர்வ தேச சமூகத்தின் கவனத்துக்குத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லும் வகையிலும் இந்தப் போராட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. போராட்டம் நடத்துவதற்குச் சில தினங்களுக்கு முன்பாகவே சுகாதாரப் பிரிவி னருக்கும் பொலிஸாருக்கும் இது தொடர்பில் அறிவித்திருந்ததாக வும் ஆனால் பொலிஸார் திட்ட மிட்டு தமது போராட்டத்தை முடக்கியுள்ளனர் என்றும் காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் கவலை தெரிவித்தனர். (ரி2)



# கருவிலேயே குழந்தைகளுக்கு சரியான வழிகாட்ட வேண்டும்

### கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூலை 28

குழந்தைகள் கருப்பையில் இருக்கும்போதே சரியான பாதை கற்பிக்கப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார். கந்தளாய் அக்போ சமூக சேவை அறக்கட்டளையின் 500 கர்ப்பவதிகளுக்கான பொதிகள் வழங்கிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு குழந்தையைப் பெற்றெடுத்து நல்லொழுக்கமுள்ள பிள்ளையாக வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரின் பொறுப்பாகும். இல்லையென்றால், சமூகம் பெற்றோரை குறை சொல்லும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி1)

# சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விரைவில் கைது

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைதுசெய்வதற்கான முறையான திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் பாதாள உலக நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அனைத்து வலைப்பின்னல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில், இவை சம்பந்தப்பட்ட அனைத்து வகையான தகவல்களையும் சட்ட அமுலாக்க முகவர் நிலையம் பெற்றுள்ளது. இந்த வலைப்பின்னல்களின் கடைசி உறுப்பினர் கைதுசெய்யப்படும் வரை நடவடிக்கைகள் தொடரும். அனைத்து பாதாள உலக நடவடிக்கைகளையும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களையும் ஒழிக்க சிறப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ரி3)

# சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்த விசேட முறைமை

கொழும்பு, ஜூலை 28

சிறுவர் துஷ்பிரயோகங்களை நிறுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சு விசேட முறைமையொன்றை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பிலான கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்துள்ளது. இதேவேளை கடந்த 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 47,177 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# சிறுபோக நெல் கொள்வனவுக்கு 1,040 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 28

சிறுபோகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியின் மூலம் ஆயிரத்து 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்முறை 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் நெல்கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சிறுபோக நெல் அறுவடையில் இம்முறை 2 லட்சம் மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இதற்கு நிதியை அரச வங்கிகள் ஊடாக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்குவதற்கு திறைசேரியினால் தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நாடு முழுவதிலும் நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. முன்னைய வருட சிறுபோக மற்றும் பெரும்போகங்களில் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ நாட்டரிசி நெல் 38 ரூபாவுக்கும் சம்பா அரிசி நெல் 31 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டன.

இவ் வருடம் ஒரு கிலோ நெல்லுக்காக 50 ரூபா உறுதி செய்யப்பட்ட விலையின் கீழ் மொத்த அறுவடையையும் விற்பனை செய்வதற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. (ரி1)

# மனிதாபிமான செயற்பாடு குறித்து இளஞ்செழியனுக்கு பாராட்டு

கொழும்பு, ஜூலை 28

நீதிபதி இளஞ்செழியனின் மனிதாபிமான செயற்பாட்டினைப் பாராட்டி தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் நீதிபதி இளஞ்செழியனை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவரது மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் அதிகாரி ஹேமசந்திர என்பவர் உயிரிழந்தார்.

குறித்த பொலிஸ் அதிகாரி தகனம் செய்யப்பட்ட தினத்தன்று அவரது பிள்ளைகள் இருவருக்கும் தான் தந்தையாக இருப்பேன் என நீதிபதி இளஞ்செழியன் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் நீதிபதி, இம் முறையும் பொலிஸ் அதிகாரியின் நினைவு தினமான கடந்த 23 ஆம் திகதி சிலாபத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பிள்ளைகளின் கல்விக்கு தொடர்ந்தும் உதவிகளை மேற்கொண்டு வரும் நீதிபதி, அவர்களது போக்குவரத்து வசதிக்காக ஸ்கூட்டர் ஒன்றையும் பொலிஸ் அதிகாரியின் மகளுக்கு பெற்றுக் கொடுத்துள்ளார்.

நீதிபதியின் மனிதாபிமான செயற்பாடு தொடர்பில் சிங்கள ஊடகங்கள் பாராட்டி செய்தி வெளியிட்டுள்ளன. அந்த செய்தியில் இப்படியான ஒரு சிறந்த மனிதன் நாட்டுக்கு கிடைத்த அதிஷ்டம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி2)

# இணையவழி ஆய்வரங்கு நாளை மாலை 4 மணிக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இணைந்து சூம் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுக்கும் 20 நாள் இணையவழி ஆய்வரங்கில் நாளை புதன்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, இலங்கை மரபுத் தமிழ் இலக்கியம் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பிற்கூறப்பட்ட கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

### கைதான ஆசிரியரால்

# 16 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் துஷ்பிரயோகம்

### விசாரணையில் வெளிவந்த அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூலை 28

சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட கொழும்பில் மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியரால் 16 வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளைகளே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட 3 மாணவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலதிக வகுப்பு மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஈடுபடும் சந்தேகநபர் அதன் ஊடாக அடையாளம் காணும் மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களை தனது வீட்டிற்கு வரவழைத்துள்ளார். வீட்டிலேயே பல மாணவர்களை அவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று தெரிய வந்துள்ளது. ஆசிரியரின் வீட்டில் மீட்கப்பட்ட பல புகைப்படங்கள் துஷ்பிரயோகத்தின் போது எடுக்கப்பட்டவையாகும்.

இவர் தொடர்பில் மேலும் பல தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. கொள்ளுப்பிட்டி பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)



# எம்.சி.சி. உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திடாது

## மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்கிறார் அமைச்சர் ரமேஷ் பத்திரன

கொழும்பு, ஜூலை 28

எம்.சி.சி உடன்படிக்கையில் தற்போதைய அரசாங்கம் எந்த வகையிலும் கையெழுத்திடாது. நாட்டு மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.



இந்த உடன்படிக்கையை எதிர்காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து இது தொடர்பான கதையை முற்றாக நாட்டிலிருந்து ஒழிக்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அம்பலாங்கொடை கஹாவ பிரதேசத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த உடன்படிக்கை தொடர்பாக ஆராய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விசேட குழுவை நியமித்தார். அந்த உடன்படிக்கை நாட்டுக்கு உகந்தது அல்ல என அந்தக் குழு தீர்மானித்துள்ளது. இதனால், எந்தவகையிலும் எமது அரசாங்கம் அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாது. எதிர்க்கட்சி இந்த உடன்படிக்கையை பிடித்துக் கொண்டு குழப்பிய குட்டையில் மீன்பிடிக்க முயற்சித்தாலும் அது நிறைவேறாது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு போராட்ட கோஷங்கள் இல்லாத நிலையில், இந்த உடன்படிக்கையைப் பிடித்துக் கொண்டு துள்ளுவதில் பயனில்லை-என்றார்.(ரி2)

# வாகன விபத்தில் தம்பதியினர் உட்பட மூவர் உயிரிழப்பு

கம்பளை, ஜூலை 28

பேராதனை கம்பளை பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் கணவன் மனைவி உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

கெலிஓய திசை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாலையில் உள்ள பாதசாரி ஒருவர் மீது மோதியுள்ளது. இதன்போது எதிர் திசையில் இருந்து வந்துக்கொண்டிருந்த முச்சக்கர வண்டி ஒன்று வீதியில் விழுந்துகிடந்த பாதசாரி மீது ஏறிச் சென்று எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவத்தில் பலத்த காயமடைந்த முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி அதன் பின் ஆசனத்தில் பயணித்த இரண்டு பெண்களும் ஓர் ஆணும் பலத்த காயங்களுடன் கம்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். மோட்டார் சைக்கிளில் சாரதி பேராதனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் முச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணொருவரும் அவரது கணவரும் உயிரிழந்துள்ளனர் என்றும் இருவரும் 53 மற்றும் 54 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் 54 வயதுடைய நபர் ஒருவரும் சம்வத்தில் மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி1)

# போலிக் கடவுசீட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் 6 பேர் கைது

கொழும்பு, ஜூலை 28

போலிக் கடவுச்சீட்டுக்களுடன் வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்கு முயற்சி செய்த 3 பெண்கள் உள்ளிட்ட 6 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் கட்டார் வழியாக இத்தாலி நோக்கிப் பயணிப்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் தங்கொடுவ, தும்மலசூரிய, லுணுவில, நாத்தாண்டி மற்றும் பல்லேகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி2)

# காலி சிறைக்கைதிக்கு கொரோனாத் தொற்று

## 200 கைதிகள், 20 அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஜூலை 28

சேனபுர புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்த காலி சிறைச்சாலையின் கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து காலி சிறைச்சாலையில் உள்ள 200 கைதிகளும் 20 அதிகாரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். காலி சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளவர் ஏற்கனவே வெலிக்கடையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவருடன் தொடர்பைக் கொண்டிருந்தார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவருக்கு மூன்று தடவைகள் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இறுதிச் சோதனையிலேயே அவர் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது. (ரி1)

# வெளிநாடுகளில் சிக்கியுள்ளவர்களை திருப்பியழைக்க வேண்டும்

## அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

கொழும்பு, ஜூலை 28

கொரோனாவினால் பாதிக்கப்பட்டு வெளிநாடுகளில் நிர்க்கதியாகியிருக்கும் இலங்கையர்களை திருப்பி அழைக்க உத்தரவிடவேண்டும் என்று கோரி அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டத்தரணி நாகாநந்த கொடித்துவக்கு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், சுகாதார அமைச்சர், குடிவரவுக்கட்டுப்பாட்டாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் மத்திய கிழக்கு உட்பட்ட வெளிநாடுகளில் இலங்கைக்கு வருவதற்காக காத்திருக்கின்றனர். இதுவரை கொரோனாவினால் 40 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர். வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அரசமைப்பின்படி தமது தாய்நாட்டுக்கு திரும்ப சட்ட உரிமை உண்டு என்று மனுதாரர் தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார். (ரி1)



பஸ்களில் பொருள்களை விற்பனை செய்வோர் நேற்றையதினம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடமாடும் வியாபாரிகளின் சங்கத்தினரால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக பஸ்களுக்குள் பொருள்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதனால் தாம் வருமானப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ரி3)

# இலஞ்சம் பெற்ற கிராமசேவகர் கைது

கொழும்பு, ஜூலை 28

கிராமசேவை அலுவலர் ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வதிவிட சான்றிதழ் வழங்குவதற்காக இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டிலேயே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 174, வனாதமுல்ல கிராமசேவகர் பிரிவில் கடமையாற்றி வந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். நபரொருவருக்கு ரயில்வேத் திணைக்களத்துக்குச் சமர்ப்பிப்பதற்காக, வதிவிட சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காகவே இவ்வாறு அவர் இலஞ்சம் பெற்றுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி2)

# பிரசாரங்களில் வெறுக்கத்தக்க பேச்சுக்கள் இடம்பெறக்கூடாது

## மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை இணைப்பாளர் வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜூலை 28

கடந்த 5 வருடங்களாக இயங்கி வரும் மட்டக்களப்பு மாவட்ட சர்வமத சமாதானப் பேரவை மட்டக்களப்பு மாவட்டத்தில் இனங்களுக்கிடையில், மதங்களுக் கிடையில் சில பிரச்சினைகள் வரும்போது அதனைத் தீர்த்து வைப்பதில் முன்னின்று செயற் பட்டு வருகின்றது. இந்நிலையில் சிவில் சமூகத்தின் வகிபாகம் என்ன என்பதற்கிணங்க, சிவில் சமூகமா கிய மக்கள் எவ்வாறு எதிர்வரும் தேர்தலில் செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் கலந்துரை யாடி வருகின்றது. அந்தவகையில் அரசியல் பிரசாரங்களில் வெறுக் கத்தக்க பேச்சுக்கள் இடம்பெறக் கூடாது என்று மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை இணைப்பாளர் இ.மனோகரன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையும், சிவில் சமூக அரங்கமும் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு மட்டக்களப்பு கல்லடி யில் அமைந்துள்ள தனியார் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கி ழமை மாலை இடம்பெற்றது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி வித்ததாவது;

நடைபெறவுள்ள தேர்தலுக்கு தற்போது பிரசார நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பிரசார நடவடிக்கைகளில் வெறுக் கத்தக்க பேச்சுக்கள், பொய்ப் பிரசாரங்கள், வதந்திகள் இடம் பெறக்கூடாது, நடைபெறவுள்ள தேர்தல் சுதந்திரமானதும், ஜனநாய கரீதியிலும் நடைபெறவேண்டும் என்பது தான் எமது முக்கியமான குறிக்கோளாகும்.

இந்தத் தேர்தலுக்காக முன்னெ டுக்கப்படுகின்ற பிரசாரங்கள் மூலம் இனங்களுக்கோ, மதங்க ளுக்கோ, எதுவித முரண்பாடு களும், பிரச்சினைகளும் வரக் கூடாது என்பதுவும் எமது வேலைத்திட்ட மாகும். இதன்போது முக்கியமாக சில பிரச்சினைகள் வருகின்ற போது, மக்கள் அவர்களது சமயத் தலைவர்களிடத்தில் தான் அவர்க ளது பிரச்சினைகளைத் தெரிவிக் கின்றார்கள். அந்தவகையில் சமயத் தலைவர்களாக இருந்தாலும், அவர்கள் குறித்த பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அளவுக்கு அவர்க ளுக்கு மத்தியஸ்தம், இன முரண் பாடுகளைத் தீர்த்துவைத்தல், வன்முறையற்ற பேச்சுக்கள் போன்ற பல்வேறுபட்ட பயிற்சிகளை எமது மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை வழங்கியுள்ளது. எம்மால் வழங்கப்பட்ட பயிற்சிகளைக் கொண்டு, எமது மதத் தலைவர் கள், பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றுக்குத் தீர்வுகண்டு வருகின் றார்கள் -என்கிறார். (ரி2-46)

# தாக்குதலுக்குள்ளான முதியவர் மருத்துவமனையில் அனுமதி

சாவகச்சேரி, ஜூலை 28

தாக்குதலுக்கு உள்ளான முதியவர் ஒருவர் சாவகச்சேரி மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டுள் ளார். இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை தென்மராட்சி கிழக்கில் இடம்பெற்றுள்ளது. மேலும், அவரது மனைவியும் மகளும் சேர்ந்து அவரைத் தாக்கி யுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நேற்று இரவு இனந் தெரியாதோரால் தாக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த 40 வயது குடும்பத்தவர் ஒருவரும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3-9)

# திருமலையில் பாதை தீக்கிரை

திருகோணமலை, ஜூலை 28

திருகோணமலை - வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 'பாதை' ஒன்று இனந்தெரியாதோரினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

திருகோணமலை கருக்கா முனைக்கும், இலங்கைத் துறைமுக முகத்துவாரத்துக்கும் இடையே கலப்புப் பகுதி காணப்படுவ தால் அப் பகுதிக்கு மக்கள் செல்வதற்கு பல வருட கால மாக பாதை இன்றி காணப்படுவ தால் நேற்றைய தினம் அப்பகுதி மக்களின் நலன் கருதி இப் பாதை வழங்கப்பட்டுள்ளது.

இப் பாதையை ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், பாடசாலை மாணவர்கள் அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாதையே இவ்வாறு தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித் துள்ளனர். (ரி2)

திருகோணமலை மாவட்டத்தில்

# சிறுபோக வேளாண்மை நீரில் மூழ்கிப் பாதிப்பு!

திருகோணமலை, ஜூலை 28

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைப் பகுதியில், கரையான்பிலவு மற்றும் ஐயாத்தை போன்ற விவசாய சம்மேளனத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை, அறுவடைக்கு தயாரான நிலையில், கடும் காற்றினாலும் தற்போது பெய்துவரும் அடைமழை காரணமா கவும் 1200 க்கும் மேற்பட்ட ஏக்கர் நீரில் மூழ்கிய நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் நேற்று மாலை 5 மணி தொடக் கம் இன்று காலை வரை கடும் காற்றுடன் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

இதனால் கரையான் பிலவு விவசாய சம்மேள னத்தின் கீழ் 650 ஏக்கரும், ஐயாத்தை விவசாய சம்மேளனத்தின் கீழ் 450 ஏக்கரும் நீரில் மூழ் கிப் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மிகவும் பாதிக்கப்பட்டு கைவிட பட்ட விவசாய நிலங்களை விவசாயத் திணைக் களத்தின் அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட் டுள்ளதுடன் இன்று காலையும் ஏனைய பகுதி களைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர் எனவும் கரையான் பிலவு விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ்.இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார். (ரி2)



ஜோர்தானில் போராட்டத்தில் ஈடுபட்ட

# இலங்கையர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 28

ஜோர்தானில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட தமிழர்கள் உள்ளிட்ட இலங்கைத் தொழிலாளர்கள் மீது அந் நாட்டு பொலிஸார் தாக்கு தல் நடத்தியுள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக பாதிக்கப்பட் டுள்ள இலங்கைத் தொழிலா ளர்கள் தங்களைச் சொந்த நாட்டுக்கு மீள அனுப்புமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தாங்கள் வேலை யில்லாமல் இருக்கிறார்கள் எனவும், தொடர்ந்து நான்கு மாதங்கள் வரை தமக்குரிய ஊதியம் வழங்கப்பட வில்லை எனவும் தொழிலா ளர்கள் கூறியுள்ளனர். இந்நி லையில், தங்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கைத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், தொழிலாளர்க ளுக்கும், தூதரக அதிகாரிக ளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட பதற்றமான நிலையை அடுத்து அந் நாட்டு பொலிஸாரால் கண்ணீர்ப்புகை குண்டு வீசப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)

# மழை கால விபத்தைத் தடுக்க இரும்பினாலான பாதுகாப்புக் கட்டமைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 28

மழை காலங்களில் ஏற்படும் விபத்தை தடுக்கும் நோக்கோடு மட்டக்களப்பு மாநகர சபையினால் மட்டக்களப்பு அரசடியிலுள்ள சிறிய பாலத்தில் இரும்பினாலான பாதுகாப்புக் கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாக மாநகர சபையின் அரசடி வட்டார உறுப்பினர் சிவம் பாக்கிய நாதன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பாலம் பொதுமக்களின் பாவனைக்காக இன்று கையளிக்கப்பட்டது. அந்தப் பாலத்தின் மேலாக வெள்ளம் பாயும் போது பலவீனமானர்கள் வடிகானுக்குள் விழுந்து விபத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்காகவும், பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், பொது மக்கள் ஆகியோரின் சிரமத்தைத் தடுப்பதற்காகவும் இந்த பாலத்தின் இரு மருங்கிலும் இரும்புக் கம்பி கட்டமைப்பு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். நீண்ட காலமாகக் காணப்பட்ட இப் பிரச்சினை தற்போதைய



மாநகர நிர்வாக ஆட்சிக் காலத்தில் சாத்தியமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் முறைப்பாட்டிற்கமையவே இந்த அபிவிருத்திச் செயற்பாடு இடம்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2-46)

# கோத்தாவை.....

கூட்டமைப்புக்கா நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்கள்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் வேட்பாளருமான ஈ.சரவணபவன்.

மூளாயில் நேற்று திங்கட் கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. கோத்தாபய ராஜபக்சவும் அவரை எதிர்த்து சஜித் பிரேமதாசவும் களமிறங்கியிருந்தனர். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் எத்தகைய நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்தது. ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஓரணியில் வாக்களித்து சுமார் 4 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வடக்கில் கோத்தாபயவை தோற்கடித்தனர். 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு 10 ஆண்டுகள் காத்திருந்து ஜனநாயகப் பதிலடியை, நெத்தியடியாகக் கொடுத்தனர். கோத்தாபயவை எதிர்க்கும் முடிவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகத்துணிவாக எடுத்தது. அதை நடைமுறைப்படுத்த முழு வீச்சில் முயற்சி செய்தது.

ஆனால் விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் ஜனாதிபதித் தேர்தலின்போது என்ன செய்தார்கள்? மக்களே 8 மாதங்களுக்கு முன்னர் நடந்ததை மறந்து விட்டீர்களா? இவர்கள் ஜனாதிபதித் தேர்தலின்போது மக்களை வழிகாட்டுவதற்குப் பதிலாக, கோத்தாவை நேருக்கு நேர் எதிர்ப்பதற்கு துணிவில்லாமல் ஓடி ஒளிந்ததை மறந்து விட்டீர்களா?

தேர்தலில் ஒருவரை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் வழமை. இல்லை தேர்தலை புறக்கணிக்கலாம். தேர்தல் புறக்கணிப்புக் கூட ஒரு தரப்புக்கு மறைமுக ஆதரவை வழங்கும் நிலை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் காணப்பட்டது. இதைத் தெரிந்து கொண்டும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிரங்கமாக அறிவித்தது. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது தமக்குத் தாமே மண் அள்ளி தலையில் கொட்டிக்கொள்வதற்குச் சமனானது.

மறுபுறம் விக்னேஸ்வரனோ, மக்கள் விரும்பியவாறு வாக்களிக்கலாம் என்று ஒடும் நீரில் நழுவும் மீன் போல, கோத்தாவை எதிர்ப்பதிலிருந்து நழுவிக் கொண்டார். ஒரு தலைவன் என்பவன், மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கூட மஹிந்த ராஜபக்சவுக்கு யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 76 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபயவுக்கு 23 ஆயிரம் வாக்குகளே கிடைத்தன. அந்தளவு தூரம் தமிழ் மக்கள் கோத்தாபயவை நிராகரிக்க வேண்டும் என்பதில் தீர்மானமாக இருந்தார்கள். தமிழ் மக்களின் மனநிலையை அறியாது, அவர்களைப் பாழ் கிணற்றிலே தள்ளிவிட நினைத்த விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமுமா உங்கள் தெரிவு?

ராஜபக்சக்களின் ஆட்சி தென்னிலங்கையில் வருமாக இருந்தால் அவர்களை எதிர்க்கத் திராணியுள்ள ஒரேயொரு சக்தி இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம்தான். கோத்தாவை எதிர்க்க முடியாது புறமுதுகு காட்டி ஓடிய விக்னேஸ்வரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ உங்கள் தெரிவாக இருந்தால், ராஜபக்சாக்கள் தமிழர்களின் முதுகில் ஏறிச் சவாரிதான் செல்வார்கள்.

தென்னிலங்கையில் விஸ்பரூபம் எடுத்து வரும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை மூர்க்கத்தனமாக எதிர்த்து, தமிழரைப் பாதுகாக்க கூட்டமைப்பால் மாத்திரமே முடியும்.

எங்கள் வீரமிகு போராளிகளையும், மக்களையும் பல்லாயிரக்கணக்கில் துடிக்கத் துடிக்கக் கொன்று குவித்த கோத்தாபயவை எதிர்க்கத் துணிவின்றி ஓடி ஒளித்துக் கொண்ட கோழைகளின் கூட்டத்திடம், நீங்கள் கேட்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவை எதிர்க்க பயந்த நீங்கள், தமிழருக்காய் நாளை துணிந்து குரல் கொடுப்பீர்கள் என்று எப்படி நம்புவது?,

ராஜபக்சக்களின் கொட்டத்தை அடக்குவதற்கு, கோத்தாவை மறுபடியும் தோற்கடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆணை தாருங்கள், என்றுள்ளது. (ஓ,5)

# யாழ்.போதனாவில்....

கொரோனாத் தொற்று என்று அறிவிப்பதற்கு அவரது மாதிரியில் 40 சதவீதத்துக்கு மேல் குறிப்பிட்ட வைரஸ் காணப்பட வேண்டும் என்ற நிலையில், மேற்படி நபருக்கு 38 சதவீதத்துக்கும் குறைவான அளவு வைரஸே இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சவுதியிலிருந்து நாடு திரும்பிய நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்றுக்கான சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது கொரோனாத் தொற்றில்லை என்று தெரியவந்தது. வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தல் மையங்களில் தங்க வைக்கப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுவார்கள். அதனடிப்படையில் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்தில் அவர் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு இதுவரை 4 தடவைகள் கொரோனாத் தொற்றுக்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், 4 தடவைகளும் கொரோனா தொற்றில்லை என்றே முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை இருதய நோய் காரணமாக கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் 7ஆம் விடுதியிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட அறையினுள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இதன்போதும் கொரோனாத் தொற்றுக்கான சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவும் தொற்று இல்லை என்றே கிடைக்கப் பெற்றுள்ளது. அவர் சிகிச்சையளிக்கப்பட்டு வெளியேறும் போது மீண்டும் தொற்றுக்கான சோதனை செய்யப்பட்டுள்ளது. இதன்போதே அவருக்கு மிகக் குறைந்தளவான தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவருக்கு மீண்டும் சோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஓ,5)

## கொரோனாவால் ...

உட்பட்ட பகுதிகளுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு நாளை மேற்கொள்ளப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ஓ,5)

## கொரோனா என்று ....

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: எதிர்வரும் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் எமது வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் உங்களுக்கு சேவை செய்யக்கூடிய சரியானவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். கொரோனா என்று பயப்படாமல் வாக்களிக்கும் வாய்ப்பை பயன்படுத்தி, எங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டும்- என்றார். (ஓ,5,111)

## விபத்தில்...

டிப்பர் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டிமூலம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார்.

விபத்தால் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் குடைசாய்ந்துள்ளதுடன் அதன் சாரதி சிறுகாயங்களுக்கு உள்ளாகினார். சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஓ,5,110)

## கொரோனாவிலிருந்து...

காலை 10 மணியளவில் இடம்பெற்றது. இடர்கள் வருகின்றபோது அதிலிருந்து மக்களை காக்கவேண்டியும் கிருஸ்ண பகவானின் ஆசி வேண்டியும் இடம்பெற்றது.

யாகத்துக்கு முன்னதாக காலை 6 மணியளவில் பருத்தித்துறை கோட்டு வாசல் அம்மன் ஆலயத்திலிருந்து 108 பால் குட பவனியாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு மந்திகை ஊடாக பால்குட பவனியாக பால் கொண்டு வந்தே மகா சுதர்சன் யாகம் இடம்பெற்றது. (ஓ,5)

## வலையில்...

மீனவர் உடனடியாக பளை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவற்றை மீட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் செயலிழப்புச் செய்வதற்கான அனுமதியைப் பெற்று சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறில் தனியார் காணிக்குள் குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு நீதிமன்றில் அனுமதி பெற்று செயலிழப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ,5,6)

## புதினம் தெரியுமோ?

தடுப்போம் என்று ஆசை காட்டியிருக்கிறார்கள். அதை நம்பி சுமார் 5 கோடி ரூபா பணம் அவர்களுக்கு உடனேயே வழங்கப்பட்டு, தேர்தல் முடிந்த பின்னர் மிகுதிப்பணம் வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டுள்ளது. வந்தவர்களும் உடனேயே பணியை ஆரம்பித்து , அதுபற்றிய தகவல்களை உடனுக்குடன் புகைப்பட ஆதாரங்களோடு அனுப்பத் தொடங்கினர். சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்தல், பொதுக்கூட்டம், பொக்கற் கூட்டம் என எல்லாத் தகவல்களும் மேலிடத்துக்குப் பறந்தன. தங்கள் டம்மிக் குழுவுக்கு இவ்வளவு வரவேற்பா என மகிழ்ந்து போன மேலிடம், தங்கள் குழுவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பதற்காக நம்பிக்கையான இரண்டாம் கட்டத் தலைவர்களை வன்னிக்கு அனுப்பி , சுயேச்சைக் குழுவின் கூட்டங்களில் பங்கெடுக்குமாறு கூறியுள்ளனர். அந்த இரண்டாம் கட்டத் தலைவர்களும் கூட்டம் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்ட இடத்துக்கு போனால், அங்கு ஈ, காக்கா கூட இல்லை. ஆனால் மேலிடத்துக்கு அடுத்த சில நிமிடங்களில் நூற்றுக்கணக்கான மக்களோடு அந்த இடத்தில் கூட்டம் நடந்த புகைப்படங்கள் சுயேச்சைக் குழுவால் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் பிறகு விழித்துக் கொண்ட மேலிடம் , கொஞ்சம் விசாரித்துப் பார்த்ததில் வாங்கிய 5 கோடியையும் தமக்குள் பகிர்ந்து கொண்ட சுயேச்சைக் குழு உறுப்பினர்கள், ஒருசில சுவரொட்டிகள் , துண்டுப்பிரசுரங்களை அச்சமடித்துவிட்டு, வேறு கட்சிகளின் பிரசாரப்பணிகளை புகைப்படம் எடுத்து மேலிடத்து அனுப்பி, டிமிக்கி கொடுத்திருக்கிறார்கள் என்ற உண்மை தெரியவந்துள்ளது. பிழைக்கத் தெரிந்தவர்கள்.

–பட்சி

## கடற்றொழிலுக்கு சென்றவரை....

லுக்குச் சென்ற ஒரு மீனவர் கரை திரும்பியுள்ளார். மற்றைய மீனவர் இன்னும் கரை திரும்பாத நிலையில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த பெர்னாண்டோப்பிள்ளை அருள்நேசன் (வயது60) என்பவரே காணாமற்போயுள்ளார்.

படகு கவிழ்ந்ததாகவும் கவிழ்ந்த படகின் மீது தான் ஏறி இருந்த நிலையில் ஏனைய படகில் வந்தவர்களால் மீட்கப்பட்டேன் என்றும் மற்றையவரைக் காணவில்லை என்று, கரைசேர்ந்த மீனவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ஓ,5,6)

## நெடுங்குளம்...

கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளார். யாழ்ப்பாணம் நெடுங்குளத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரே, கொரோனா தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். கந்தக்காட்டில் இருப்பவர்களை பெற்றோர்கள் பார்ப்பது சில வாரங்களுக்கு மேலாக தடை செய்யப்பட்டிருந்ததால், அண்மைய நாள்களில் அவரை பார்வையிட யாரும் சென்றிருக்கவில்லை. இதனால் பிரதேசவாசிகள் யாரும் அச்சமடைய தேவையில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

கொரோனா பாதிப்பால்

# மிகவும் கடுமையான சுகாதார அவசரநிலை

## உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் எச்சரிக்கை

ஜெனிவா, ஜூலை 28



கொரோனாவின் பாதிப்பு காரணமாக இதுவரை தமது அமைப்பால் அறிவிக்கப் படாத மிகக் கடுமையான உலகளாவிய சுகாதார அவசர நிலையை பிரகடனப்படுத்த நேர்ந்ததாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் வைத்திய கலாநிதி டெட்ரோஸ் அத்தனொம் தெரிவித்துள்ளார். இந்த வாரத்தில் உலக சுகாதார நிறுவனம் தமது அவசரக் குழுவை கூட்டி கொரோனா தொடர்பில் மறு ஆய்வை மேற்கொள் ளவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தினால் ஐந்து தடவைகள் சுகாதார அவசரநிலை அறிவிக்கப்பட்டன. இரண்டு தடவை கள் எபோலா பரவல்கள், ஜிகா, போலியோ மற்றும் பன்றிக்காய்ச்சல் பரவல் வேளைகளில் இந்த அவசர நிலைகள் அறிவிக் கப்பட்டன.

எனினும் தற்போதுள்ள நிலை மோசமான ஒன்றா கும். கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 16 மில்லியன்களை விட அதிகரித்துள்ளது. 650,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர். கடந்த ஆறு வாரங்களில் மாத்திரம் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இந்தநிலையில் கொரோனா வைரஸை வெற்றிகொள்ள உலகம் எவ்வளவு முயற்சி செய்தாலும் முன்னே நீண்ட ஒரு கடினமான பாதை இருக்கிறது என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் எச்சரித்துள்ளார்.

# 2021 ஜூலை வரை வீட்டிலிருந்து பணி

### கூகுள் நிறுவனம் அனுமதி

அடுத்த வருடம் ஜூலை மாதம் வரை தமது ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிவதற்கு கூகுள் நிறுவனம் அனு மதி வழங்கியுள்ளது. கொவிட் 19 வைரஸ் தொற்று காரண மாக குறித்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது. கூகுல் நிறுவ னத்தின் தலைமை அதிகாரி சுந்தர் பிச்சை மற்றும் உயர் மட்ட நிர்வாகிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை யடுத்து குறித்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

கூகுள் நிறுவனம் இவ்வருடம் பல பகுதிகளில் தமது அலுவலகங்களை திறக்க தீர்மானித்திருந்த நிலையிலேயே வைரஸ் தொற்று ஏற்பட்டது. கொரோனா வைரஸின் தாக்கமானது அடுத்த வருட ஆரம்பம் வரை நீடிக்குமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே 2021ஆம் ஆண்டு வரை தமது ஊழியர்களுக்கு வீட்டில் இருந்து பணிபுரிவதற்கான அனுமதி கூகுள் நிறுவனத்தி னால் வழங்கப்பட்டுள்ளது. (ரி1)

கொரோனாவை கண்டறிய

# புதிய கருவியை உருவாக்க இஸ்ரேல் - முயற்சி




கொரோனா வைரஸ் தொற்றை விரைவில் கண்டறியும் நோக் கில் இஸ்ரேலுடன் இணைந்து புதிய கருவியை உருவாக்கும் திட்டத்தில் இந்தியா ஈடுபட் டுள்ளது. இந்த கருவியின் மூலம் வைரஸ் தொற்று ஏற்பட் டுள்ளமை தொடர்பில் 30 விநாடிகளில் கண்டறிய முடியுமென தெரியவந்துள்ளது.

தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்துவதன் மூலமே சமூகத்தில் ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்த முடியும். இந்நிலையில் துரித கதியில் வைரஸை கண்டறியும் கருவியை உருவாக் கும் செயற்திட்டத்தை இந்திய மத்திய இராணுவம் மற்றும் இஸ்ரேலின் நிபுணர் குழு இணைந்து முன்னெடுத்துள்ளன என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி1)

# எனக்கு ராஜாவா நான் வாழுறேன்

### இணையத்தை தெறிக்கவிடும் ரகிட ரகிட ரகிட..!!






தனுஷ் ஓர் அரிய திறமை கொண்டவராகவும் தனது மாறுபட்ட நடிப்பால் பல ஆண்டுகளாக தமிழ் சினிமாவில் பிரம்மாண்ட வளர்ச்சி பெற்ற கதாநாயகனாகவும் வலம் வருகிறார். 18 ஆண்டு களுக்கு முன்பு 'துள்ளுவதோ இளமை' படத்தின் மூலம் சினிமா உலகில் தனது பயணத்தைத் தொடங்கிய அவர் இப்போது 40 படங்களைக் கடந்து அசைக்கமுடியாத தூணாக நிற்கிறார். அவர் ஒரு சிறந்த நடிகர் மட்டுமல்ல, பாடகர், பாடலாசிரியர், தயாரிப்பாளர் மற்றும் இயக்குந ரும் ஆவார்.

கடைசியாக பொங்கல் வெளியீடான 'பட்டாஸ்' திரைப்படத்தில் காணப்பட்ட அவர், தற்போது கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் தனது 'ஜகமே தந்திரம்' படவெளியீட்டுக்காக காத்திருக்கிறார். இன்று அவரது பிறந்தநாள் என்றாலும், இந்த மாத தொடக்கத்தில் இருந்தே ரசிகர்கள் கொண் டாடத் தொடங்கினர். அவர்களுடன் இணைந்த படக்குழுவும், முன்பு அறிவித்ததைபோலவே இன்று காலை 'ஜகமே தந்திரம்' படத்தில் இருந்து ரகிட ரகிட ரகிட என்ற பாடலை தற்போது வெளியிட்டுள்ளது. தனுஷ் குரலில் ஒலிக்கும் 'எனக்கு ராஜாவா நான் வாழுறேன்...' என்று தொடங்கும் இந்த பாடல் தற்போது இணையத்தை கலக்கி வருகிறது.

# திறமைக்கு விருது கிடைப்பதில்லை



விருதுகள் கொடுப்பதில் எனக்கு பல தடவை அநியாயம் நடந்துள்ளது என்று தமிழ், தெலுங்கு மொழிகளில் பிரபல நடிகையாக இருக்கும் தமன்னா கூறியிருக்கிறார்.

திரையுலகில் வாரிசு நடிகர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர் எனவும் வெளியில் இருந்து வரும் நடிகர், நடிகைகள் வாய்ப்புகளை அவர்கள் தடுக்கின்றனர் எனவும் விமர்சனங்கள் கிளம்பி உள்ளன. விருதுகளைக்கூட வாரிசு நடிகர், நடிகைகளுக்குத்தான் கொடுக்கிறார்கள் என்றும் குற்றம்சாட்டப்படுகிறது. நடிகை தமன்னாவும் இதனை ஆமோதித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

"விருதுகள் கொடுப்பதில் எனக்கு பல தடவை அநியாயம் நடந்துள்ளது. நிறைய தடவை விருதுகளுக்கு எனது பெயர் பரிந்து ரைக்கப்பட்டது. ஆனால் விருது மட்டும் எனக்கு வரவே இல்லை ரசிகர்கள் ஆதரவு தான் முக்கியம். அவர்கள் எவ்வளவு நாள் ஆதரிக்கிறார்களோ அவ்வளவு நாள் நிலைத்து இருக்கலாம். எனது படங்க ளுக்கு ரசிகர்கள் ஆதரவு இருப்பதில் திருப்தியாக இருக்கிறேன். ரசிகர்கள் ஆத ரவை விட பெரிய விருது எதுவும் கிடை யாது." இவ்வாறு தமன்னா கூறினார்.

# நான்காம் நாள் ஆட்டம் ரத்து

## இங்கிலாந்து ஏமாற்றம்




லண்டன், ஜூலை 28

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மான்செஸ்டர் டெஸ்டின் 4 ஆவது நாள் ஆட்டம் முழுவதும் மழையால் தடைபட்டது.

இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் மான்செஸ்டர் எமிரேட்ஸ் ஓல்ட் டிராஃபோர்டில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 369 ஓட்டங்கள் குவித்த நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து அணி சார்பில் ஸ்டூவர்ட் பிராட் 6 இலக்குகள் அள்ளினார். பின்னர் 172 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் இங்கிலாந்து 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களான ரோரி பேர்ன்ஸ், டொமினிக் சிப்லி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சிப்லி 56 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து கப்டன் ஜோ ரூட் களம் இறங்கினார். இவர் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ரோரி பேர்ன்ஸ் 90 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 2 இலக்கு இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 2 ஆவது இன்னிங்ஸை ஆட்டமிழக்கச் செய்தது. ஜோ ரூட் 56 பந்தில் 68 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுடன் மொத்தமாக இங்கிலாந்து 398 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 399 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித் துள்ளது.

399 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டத்தின்போது 10 ஓட்டங்கள் அடிப்பதற்குள் இரண்டு விக்கெட்டுகளை இழந்தது. ஷாய் ஹோப் 4 ஓட்டங்களுடனும், கிரேக் பிராத்வைட் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இன்று 4 ஆவது நாள் ஆட்டம் நடைபெற இருந்தது. இன்றைக்குள் 8 இலக்குகளையும் வீழ்த்தி டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்று தொடரை 2:1 எனக் கைப்பற்றி விடலாம் என்று இங்கிலாந்து எண்ணியிருந்தது. ஆனால் இன்று காலையில் இருந்தே மழை பெய்தது. இதனால் போட்டியைத் தொடங்குவதற்கான சாத்தியக்கூறு இல்லாமல் போனது. இதனால் நடுவர்கள் 4 ஆவது நாள் ஆட்டம் ரத்து செய்யப்படுவதாக அறிவித்தனர். (ரி2)



## ஓகஸ்ட் 28 இல்

# லங்கன் பிரீமியர் லீக்

கொழும்பு, ஜூலை 28

இலங்கையில் முதல் தடவை இடம்பெறவுள்ள, லங்கன் பிரீமியர் லீக் ரி20 போட்டிகள் எதிர்வரும் ஓகஸ்ட் 28 முதல் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அரங்கில் முதன்மையான கிரிக்கெட் போட்டியாக லங்கன் பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடரை அடுத்த மாதம் நடத்துவதற்கு, நேற்று இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாக சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, லங்கன் பிரீமியர் லீக் போட்டிகள் ஓகஸ்ட் 28 முதல் செப்டெம்பர் 20 வரை, இலங்கையிலுள்ள 4 சர்வதேச மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

23 போட்டிகள் கொண்ட இத் தொடரின் அனைத்து போட்டிகளும் ஆர். பிரேமதாஸ, ரங்கிரி தம்புள்ளை, கண்டி பல்லேகலை, அம்பாந்தோட்டை சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ மைதானங்களில் இடம்பெறவுள்ளன இந்த போட்டித் தொடரில் 5 அணிகள் பங்கேற்கவுள்ளன.

கொழும்பு, கண்டி, தம்புள்ளை, காலி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வணிகளின் பெயர்கள் அமையவுள்ளன.

இப்போட்டித் தொடரில் பங்கேற்க, 70 இற்கும் மேற்பட்ட சர்வதேச வீரர்கள் மற்றும் 10 இற்கும் மேற்பட்ட முன்னணி சர்வதேச பயிற்சியாளர்கள் முன்வந்துள்ளனர். அவர்களுடன் இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து வீரர்களும் இணைவார்கள்.

போட்டிகளுக்கான வீரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏலத்திற்கான செயற்பாடுகள் ஜூலை 30 ஆம் திகதியுடன் நிறைவடைவதோடு, அதனைத் தொடர்ந்து அட்டவணை வெளியிடப்படவுள்ளது. (ரி2)

# பீன்ஸின்

## அற்புத மருத்துவ பயன்கள்



பீன்ஸ் இரும்புச்சத்தைக் கிரகிக்கும் தன்மை பெற்றது. செரிமான சக்தியை அதிகரிக்கும். வாயுத் தொல்லையை நீக்கும். பீன்ஸில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலைப் போக்கும்.

பீன்ஸ் தனியாகவோ அல்லது மற்ற உணவுகளுடனே கலந்து தினமும் சாப்பிடுபவர்களுக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புகள் கணிசமாக குறையும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

100 கிராம் பீன்ஸில் நார்ச்சத்தானது 9% சதவீதம் உள்ளது. இந்த நார்ச்சத்தானது குடலின் உட்புறச் சுவர்களைப் பாதுகாத்து நச்சுத் தன்மைகளை வெளியேற்றும் தன்மை கொண்டது. புற்றுநோயைக் குணப்படுத்துவதில், பீன்ஸ் அதிகம் பயன்படுகிறது.

பீன்ஸில் விற்றமின் பி6, தையமின், விற்றமின் சி, இருக்கின்றமையால் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது. பீன்ஸில் உள்ள 'இசோபிளவோன்ஸ்' எனப்படும் உயிர்சத்து உடலுக்கு வலுவாக்கும் தன்மை கொண்டது. பீன்ஸ் மூலநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறந்த உணவாகும்.

பீன்ஸில் உள்ள மக்னீசியம் உடலின் வளர்சிதை மாற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொட்டாசியம் இதயத் துடிப்பை சீராக்குகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது.

பீன்ஸ் புற்றுநோய் செல்களை அழிக்கும் தன்மை கொண்டது. பீன்ஸ் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் அதில் உள்ள ஃப்ளேவோனாய்டுகள் புற்றுநோயை உண்டாக்கும் செல்களின் வளர்ச்சியை தடுத்து புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பைத் தடுக்கும்.

இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைக்க பீன்ஸ் பெரிதும் உதவுகிறது. ஏனெனில் அதில் உள்ள கார்போஹைட்ரேட் உடலில் மெதுவாக கரைவதன் காரணமாக, இரத்தத்தில் அளவுக்கு அதிகமாக சர்க்கரை சேர்வதைத் தடுக்கும்.

# சீரக நீரின் நன்மைகள்



சர்வரோக நிவாரணி' என்று சொல்வார்கள். செரிமான கோளாறு, இரத்த சோகை, சுவாச மண்டல பிரச்சினை, தூக்கமின்மை, ஞாபக சக்தி குறைவு, சரும நோய் என்று பல்வேறு உடல்நல குறைபாடுகளை தீர்க்கக்கூடிய ஒரு பொருள் உள்ளது.

ஒரு கரண்டி சீரகத்தை சிறிதளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து, அந்த நீரை வடிகட்டி எடுத்துக் கொள்ளவேண்டும். காலையில் வெறும் வயிற்றில் இதை பருக வேண்டும். செரிமான கோளாறுகளின் அறிகுறிகளான வயிற்றுப்போக்கு, குமட்டல் மற்றும் வாயு தொல்லை ஆகியவை இருக்காது. நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கிறது நம் உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் நன்றாக வேலை செய்வதற்கு இரும்புச் சத்து அவசியம். சீரகத்தில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. தினசரி நம் உடலுக்குத் தேவையான இரும்புச் சத்தில் 7 விழுக்காடு ஒரு குவளை (டம்ளர்) சீரக நீர் மூலம் கிடைக்கிறது. நோய் தொற்றிலிருந்து உடலை பாதுகாப்பதற்கு உதவக்கூடிய விற்றமின்கள் 'ஏ' மற்றும் 'சி' சீரக நீரில் காணப்படுகிறது.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 28.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.